செ.வெ.எண்.44 நாள்:18.11.2019

**அரியலூரில் 66வது அகில இந்திய கூட்டுறவு வார விழாவில் 907 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 19 இலட்சத்து 81 ஆயிரத்து 500 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.**

அரியலூர் மாவட்டம், அரியலூர் ரிதன்யா மஹாலில் கூட்டுறவுத்துறை சார்பில் 66-வது அகில இந்திய கூட்டுறவு வார விழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (18.11.2019) நடைபெற்றது.

மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் ஆகியோர் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்கள்.

இவ்விழாவில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஆர்.டி.இராமச்சந்திரன்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

இவ்விழாவில் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் **திரு.ஏ.ஆர்.காளியப்பன்** அவர்கள் கூட்டுறவு கொடியினை ஏற்றி வைத்தார்கள். பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்தலைவர் **திரு.என்.கே.கர்ணன்** அவர்கள் கூட்டுறவு உறுதிமொழியினை வாசித்தார்கள்.

இவ்விழாவில் சிறந்த கூட்டுறவு சங்கங்களுக்கு பரிசுகளையும், கூட்டுறவுச் சங்கங்கள் பற்றி பள்ளி அளவில் நடத்தப்பட்ட கவிதை, கட்டுரை, பேச்சு போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளையும், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் சார்பில் 1 நபருக்கு ரூ.3 இலட்சத்து 91 ஆயிரம் மதிப்பில் டிராக்ருக்கான சாவியினையும், 2 நபர்களுக்கு ரூ.8 இலட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் போர்வெல் அமைப்பதற்கான ஆணையினையும், 829 மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு ரூ.2 கோடியே 39 இலட்சத்து 70 ஆயிரத்து 500 மதிப்பில் கடனுதவிக்கான காசோலையினையும், 75 நபர்களுக்கு ரூ.67 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் மத்திய கால கடனுதவிக்கான காசோலையினையும் என ஆகமொத்தம் **ரூ.907 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 19 இலட்சத்து 81 ஆயிரத்து 500** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை **மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன் அவர்கள்** வழங்கினார்கள்.

**இவ்விழாவில், அமைக்கப்பட்டிருந்த நெசவாளர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பட்டுப்புடவை, ஆவின் உற்பத்தி பொருட்கள், கூட்டுறவு பண்டக சாலை பொருட்களின் கண்காட்சியினை பார்வையிட்டு, மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள் பேசியதாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் 66-வது அகில இந்திய கூட்டுறவு வார விழா 14.11.2019 முதல் 20.11.2019 தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது. 18.11.2019 இன்றைய தினம் ”கூட்டுறவுகள் வாயிலாக அரசின் முயற்சிகள்” என்ற தலைப்பில் கொண்டாடப்படுகிறது.

பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் உறுதியான மற்றும் ஆற்றல் வாய்ந்த கருவியாக கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படுகின்றன. தமிழகக் கூட்டுறவு இயக்கம் தமிழகத்தின் பொருளாதாரத்தில் பல்வேறு வகையான பகுதிகளிலும் கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் 64 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் கடன் சங்கங்கள் உள்ளிட்ட 250 கூட்டுறவு நிறுவனங்களும், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 9 கிளைகளும் செயல்பட்டுவருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் கூட்டுறவு சங்கங்கள் மூலம் பல எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அரியலூர் மாவட்டத்தில், 2011 முதல் 683 நபர்களுக்கு ரூ.4.15/- கோடி வறட்சி நிவாரணமும், 23,317 நபர்களுக்கு ரூ. 90.62/- கோடி பயிர்கடன் தள்ளுபடியும் 11,712 நபர்களுக்கு ரூ.8.88/- கோடி இழப்பீட்டுக்கான பயிர்காப்பீடு தொகையும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 1,54,299 நபர்களுக்கு ரூ.821.74/- கோடி பயிர்கடன் வழங்கப்பட்டுள்ளது. 1348 நபர்களுக்கு ரூ.23.62/-கோடி தான்ய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டுள்ளது. 66 நபர்களுக்கு ரூ.0.88/-கோடி சிறுவணிக கடன் வழங்கப்பட்டுள்ளது. 7577 நபர்களுக்கு ரூ.47.20/-கோடி மத்திய காலக்கடன் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அரியலூர் மாவட்டத்தில் 31 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ரூ.72.27/- கோடி அளவிற்கு வைப்பு தொகை பெறப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் 65 ஊரக கிடங்குகள் புதிதாக கட்டப்பட்டு தானியங்களை வைக்கும் விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் தான்ய ஈட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. புதியதாக மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை அமைக்க அனுமதித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். அதனடிப்படையில் அரியலூர் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலையைப் பதிவு செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இன்று நடைபெறும் இவ்விழாவில் 907 பயனாளிகளுக்கு ரூ.3 கோடியே 19 இலட்சத்து 81 ஆயிரத்து 500 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. விவசாய நலனில் அக்கறை கொண்டு செயல்படும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நாம் எப்பொழுதும் நன்றி கடன் பட்டிருப்போம் என மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா **திரு.தாமரை.எஸ்.ராஜேந்திரன்** அவர்கள் தெரிவித்தார்கள்.

இவ்விழாவில், கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் வ.சி.கோமதி, திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு இணைப்பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் மு.தனலெட்சுமி, துணைத்தலைவர் திருச்சி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் தங்க.பிச்சமுத்து, துணைப்பதிவாளர் இரா.சக்ரவர்த்தி, மாவட்ட வழங்கல் அலுவலர் இரவிச்சந்திரன், பெரம்பலூர் மாவட்ட கூட்டுறவு ஒன்றியத்துணை தலைவர் சு.பாஸ்கர், கூட்டுறவு சங்க பிரதிநிதிகள், மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**